முன்னாள் அதிபர் அமரர் திரு P.இரகுபதி அவர்களின் சேவை (1950-1954) நினைவாக...

# சாரல்

இதழ் - 04

தைத்திங்கள் 2012
வள்ளுவர் ஆண்டு 2044

OBA அரையாண்டுச் செய்திமடல்

பழைய மாணவர் சங்கம்
தி/இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி

## FORMER PRINCIPALS OF T/R.K.M. HINDU COLLEGE, TRINCOMALEE

After Mr. P . Ramachandra relinquished duties, Mr.P. Ragupathy, B.A. (Hons.) Lond. assumed duties as Principal of our College and served from 1950 to 1954 . He was an advocate by profession and was from Vaddukoddai. He was a kind-hearted elderly person, short, somewhat stout and was pleasant-looking. He used to be always in full suit (court attire) during school hours. He was fond of beetle chewing. I was then a student in the English S.S.C. class and later in the H.S.C.(Science section).

The college recorded very good results in SSC/GCE.O/L during his period and such achievement was the outcome of the dedicated services of the former Principal Mr. P . Ramachandra and his academic staff, both from India and Sri Lanka.

Mr. P. Ragupathy was an orthodox Hindu – a Muruga devotee and promoted religious activities by students. He was very particular that students attending temple poojas and festivals should not be with their shirts on and saw to it personally that no one ignored this rule.

He was very keen in staging English plays by students. Shakespeare's plays were his favourite. He wrote scripts for other plays as well and directed them himself. I had the opportunity of playing key roles in his plays.

Prior to his appointment as Principal of our college, he was said to have been actively involved in politics in the North. This fact came to light when he staged a Tamil political play in Wellington theatre hall (now Raaji theatre). It was then a tin-sheet structure. I played a key role of a politician in that play. When the play was half-way through and when I was playing my role with a fiery speech, instead of applause from the audience we heard stones falling on the roof of the theatre hall. The play was abandoned and we fled through the rear exit and jumping over fences.

Mr.P. Ragupathy was very stable in school administration. He never got disturbed when he had to face problems. Once, when there was a student unrest in the college, he handled it tactfully with lot of patience but sorted it out with firm determination upholding what he felt was right.

I remember an incident, when the College soccer team won a big match and approached him for a special holiday to celebrate the victory, he dismissed the request saying jokingly "is it a brave act for 11 boys to chase and kick one ball and claim a holiday for it?". Learning, he said, was more important for students than anything else. He personally punished students who kept away from school without valid reason. Such was his sincere interest in fulfilling the objective of an educational institution.````

Mr.P. Ragupathy was succeeded by Mr. S.Ambalavanar.

T. Kulaveerasingam
Old boy of the College

### தூரநோக்கு

ஒழுக்க விழுமியங்களிலும், கல்வியிலும், மொழியியல் தேர்ச்சியிலும்,
இணைப்பாடவிதானங்களிலும் சாதனை படைக்கும் ஒரு முன்மாதிரியான கல்லூரி.

### நோக்கு

கல்லூரியின் அடைவுகளை உச்சப்படுத்துவதற்கும், தேவையான வளங்களைத் தேடிக் கொள்வதற்கும் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வாழும் பழைய மாணவர்களினதும், வளவாளர்களினதும் பங்களிப்புடன் கூடிய சேவை அர்ப்பணிப்பு

### Vision

"An exemplary College in creating best records in discipline, education,
Lingual proficiency and co-curricular activities."

### Mission

"Dedication of Service with the contribution of the resource persons and the old students living in inland and abroad for Obtaining the required resources and Maximizing the achievements of the college"

வெளியீடு : OBA, Trinco, Hindu.
E-mail : oba@trincohindu.sch.lk
Web : www.trincohindu.sch.lk/oba/index.htm

ஆலோசகர் : திரு.இ.புவனேந்திரன்
பதிப்பாசிரியர் : திரு.ச.பாரதிநாதன்
உதவி பதிப்பாசிரியர் : திரு.ச.சிறிதரகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்கள் பாடசாலைகளுக்குச் சுமையா?

பாடசாலைகள் பற்றிய கரிசனைகளில் இன்று முகாமைத்துவம், கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு, மதிப்பீட்டுச் செயன் முறைகள், பரிகாரக் கல்வி, அடைவு முன்னேற்றம் முதலான விடயங்கள் பெரிய அளவில் பேசப்படுகின்றன. ஆனால் அந்த அளவிற்கு மாணவர்களின் ஒழுக்கம், நடத்தை என்பன குறித்த கரிசனை காட்டப்படாத ஒரு சூழலே இன்றைய பாடசாலைகளில் நிலவுவதைக் காண முடிகின்றது. மாணவர் ஒழுக்கம் நடத்தை என்பன தொடர்பாக சில பாடசாலைகள் அக்கறையோடு செயற்படுவதை மறுக்க முடியாது. ஆயினும் பொதுவாக நோக்குமிடத்து இவ்விடயங்கள் தொடர்பான அக்கறை படிப்படையாக குறைவடைந்து செல்வதையே காணமுடிகின்றது.

குறிப்பாக உயர்தர வகுப்புக்களைக் கொண்டுள்ள பாடசாலைகள், வளர்ந்த மாணவர்களைக் கையாளுவதற்குகான உளவியல் இயலுமையைக் கொண்டிருக்க வில்லையோ என்று எண்ணத் தோன்றுகின்றது. வளர்ந்த மாணவர்களினால் உருவாகும் ஒழுக்கப் பிரச்சனைகள் அநேகமான பாடசாலைகளுக்கு சவாலக அமைந்து விடுகின்றன. இதனால்தான் மாணவர்கள் பாடசாலைகளுக்கு சுமையாகிவிட்டார்களா என்று எண்ணத் தோன்றுகின்றது. இன்றைய பாடசாலைச் சமூகப் பின்னணியை நோக்கும் போது மாணவர்களுக்கான சட்டரீதியான பாதுகாப்பு. பெற்றோரின் உயர் அந்தஸ்து, மனித உரிமை நிறுவனங்களின் பார்வை என்பன காரணமாக மாணவர்களது ஒழுக்கம், நடத்தை என்பவற்றில் தலையிடுவதை ஆசிரியர்கள் தவிர்த்துக் கொள்வதை அவதானிக்க முடிகின்றது. மாணவர்களது ஒழுக்கம், நடத்தைப் பிரச்சனைகளின் கவனம் எடுப்பதனால் வீணான தொல்லைகளை சந்திக்க நேரிடும் என்று பெரும்பாலான ஆசிரியர்கள் ஒதுங்கி விடுகின்றார்கள். பாடசாலை நிர்வாகமும் இப்பிரச்சனைகளை கண்டு கொள்ளாமல் விட்டு விடுகின்றது. இத்தகைய போக்கு எமது இளைய சந்ததியினரின் எதிர்காலத்தை பாதிக்கும் என்பதை நாம் கவனத்தில் எடுக்க வேண்டும்.

அறிவுப் பிரவாகயுகம் என வர்ணிக்கப்படுகின்ற ஒரு கால கட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இன்று எமது இளையோர் பல்வேறு விடயங்களை தாமாகவே அறிந்து கொள்ளும் வாய்ப்புக்கள் பெருகி விட்டன இந்த வாய்ப்புக்கள் கல்விக்கும், அறிவுக்குமான தேடலாக அமையும் போது அதை வரவேற்கலாம். ஆனால் தமது மலிந்த உளவியல் நாட்டங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக இந்த நவீனத் தொழில் நுட்ப வசதிகளைப் பயன்படுத்திக் கொள்வது என்பது இளையோரின் வளர்ச்சி பற்றி அக்கறைப் படுபவர்களுக்கு கவலை தரும் செய்தியாகவே அமையும்.

எமது நாட்டில் 10-19 வயதுக் கிடைப்பட்ட இளைஞர்கள் மொத்த சனத்தொகையில் ஏறத்தாழ 20 வீதமாக (3.7 மில்) காணப்படுகின்றன. இத்தகைய கணிசமான சனத்தொகை வீதத்தைக் கொண்ட இளவயதினர் பெற்றோரில் தங்கியிருக்கும் காலம் மிக நீண்டதாகும். அத்துடன் இவர்கள் கல்விக்காக ஆசிரியரிடம் நீண்ட காலமாகத் தொடர்பு பட்டுள்ளனர். ஆகவே இவர்களின் உளநலம், சிந்தனை விருத்தி, நடத்தைகள் என்பவற்றில் பெற்றோரும் ஆசிரியரும் செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணிகளாக விளங்குகின்றனர்.

ஆகவே பாடசாலைக் காலத்தில் இளைஞர்களின் நடத்தை, ஒழுக்கம், சிந்தனை ஒழுங்கு என்பவற்றை சிறப்பாக் கட்டமைக்க வேண்டிய பொறுப்பு ஆிரியர்களுக்கும் பாடசாலை நிர்வாகத்திற்கும் இருக்கின்றது என்பதை மறுக்க முடியாது. வளர்ச்சிப் பருவத்தின் உடல்,உள இயல்புகள் காரணமாக மாணவர்களது நடத்தையில் ஏற்படும் சிக்கல்களை நெறிப் படுத்த வேண்டிய பொறுப்பை பாடசாலைகள் தட்டிக் கழிக்க முடியாது. வளர்ந்த மாணவர்களை சுமையாகக் கருதுகின்ற மனப்பான்மை களையப்பட வேண்டும்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் யுனிசெப் நிறுவனமும் சுகாதார அமைச்சும் இணைந்து 10-19 வயதுக்கிடைப்பட்ட இள வயதினர் மத்தியில் மேற் கொண்ட தேசிய மதிப்பீட்டாய்வு பின்வரும் விடயங்களை எமக்கு கோடிட்டுக் காட்டுகின்றது.

1. புகைப்பிடிக்கும் பழக்கம் பாடசாலையிலுள்ள 14-16 வயதுப் பிரிவினர் மத்தியில் 14 வீதமாகவும், 17-19 வயதுப் பிரிவினர் மத்தியில் 32 வீதமாகவும் காணப்படுகின்றது.

2. மதுபாவிக்கும் பழக்கம் பாடசாலை இளைஞர்களிடையே 19 வீதமாகவும், பாடசாலைக்கு வெளியேயுள்ள இளைஞர்களிடையே 34 வீதமாகவும் காணப்படுகின்றது.

3. 2 வீதமான பாடசாலை இளைஞர்களும், 4 வீதமான பாடசாலைக்கு வெளியேயுள்ள இளைஞர்களும் போதை வஸ்துக்களை பாவிக்கின்றனர்.

4. 14-19 வயதுடைய பாடசாலை செல்வோரில் 6 வீதமானவர்கள் உடலுறவு அனுபவத்தையும் 10 வீதமானவர்கள் தன்னினச் சேர்க்கை தொடர்புகளையும் கொண்டுள்ளார்.

இத்தகைய நிலைமைகள் எமது இளவயதினரின் எதிர்கால வாழ்க்கையின் அபாயகரமான போக்கை எதிர்வுகூறுகின்றன. ஆகவே மாணவர்களை ஆற்றுப்படுத்தி பயனுள்ள பிரஜைகளாக ஆளாக்க வேண்டிய பொறுப்பினை தார்மீக ரீதியில் கொண்டுள்ள பாடசாலை நிர்வாகமும் ஆசிரகளும் இது பற்றிச் சிந்திக்க வேண்டிய கடப்பாடு உள்ளது. எமது பிள்ளைகளை வழிப்படுத்தும் பொறுப்பிலிருந்து விலகிக் கொண்டு ஓடுவது எமது சமூகத்தின் ஒழுங்குகளையும் விழுமியங்களையும் பாதிக்கும்.

மாணவர்களின் நடத்தையை வழிப்படுத்தும் பொறுப்பு என்பது உளவியல் அடிப்படையிலான ஒரு விடயமாகும். உளவியல் இல்லாத ஆசிரியம் வெற்றி பெறமாட்டாது. ஆகவே வளர்ந்த மாணவர்களைக் கையாளுவதற்கான உளவியல் அறிவுத்தேவை ஆசிரியர்களுக்குத் தேவைப்படின் அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியது அதிபரின் கடமையாகும். பாடசாலைகளில் வழிகாட்டல், ஆலோசனைச் சேவைக்காக அமர்த்தப்பட்டுள்ள ஆசிரியர்கள் தமது பொறுப்புக்களை செவ்வையாக நிறைவேற்ற வேண்டும். இச் சேவையை பாடசாலைகளில் வலுப்படுத்துவது அவசிமானதாகும்.

நாளைய சமூகத்தின் பொறுப்புள்ள அங்கத்வர்கள் இன்றைய மாணவரே. ஆகவே நல்ல தொரு சமூகத்தை படைத்திட பாடசாலைகள் தமது பங்கை சரிவர ஆற்ற வேண்டும். வளர்ந்த மாணவர்களைக் கையாள்வது தொடர்பில் எல்லாப் பாடசாலைகளும் தமது பொறுப்புக்களை சரியாகத் செய்திட வேண்டும்.

பாடசாலைகள் சமூகத்தின் பின்னால் நகருகின்ற நிறுவனங்கள் அல்ல, சமூகத்திற்கு முன்னால் வழிகாட்டிச் செல்ல வேண்டிய பொறுப்பு பாடசாலைக் குரியதாகும் என்பதை கல்வியாளர்கள் மறந்து விடக்கூடாது.

சி. தண்டாயுதபாணி
சிரேட்ட நிபுணத்துவ ஆலோசகர்
GIZ/ ESC, திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011 ம் ஆண்டு A/L பெறுபேறுகள் மற்றும் 5ம் தரப்புலமைப்பரிசில் பெறுபேறுகள் ஓர் ஆய்வு விளக்கம்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேற்று பகுப்பாய்வு - 2011

| புள்ளி வீச்சு | மாணவர் எண்ணிக்கை |
|---|---|
| 00 - 10 | 00 |
| 11 - 20 | 00 |
| 21 - 30 | 00 |
| 31 - 40 | 01 |
| 41 - 50 | 04 |
| 51 - 60 | 02 |
| 61 - 70 | 03 |
| 71 - 80 | 06 |
| 81 - 90 | 08 |
| 91 - 100 | 09 |
| 101 - 110 | 08 |
| 111 - 120 | 17 |
| 121 - 130 | 17 |
| 131 - 140 | 17 |
| 141 - 150 | 20 |
| 151 - 160 | 18 |
| 161 - 170 | 13 |
| 171 - 180 | 06 |
| 181 - 190 | 02 |
| 191 - 200 | 00 |
| பரீட்சைக்குத் தோற்றியோர் | 151 |
| வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகள் பெற்றோர் | 39 |
| சதவீதம் | 25.83 |
| 100க்கு மேல் | 118 |
| 80க்கு மேல் | 135 |
| 70க்கு மேல் | 141 |
| வெட்டுப்புள்ளி | 151 |

## T/R.K.M. SRI KONESWARA HINDU COLLEGE

## RESULTS ANALYSIS G.C.E. (A/L) - 2011

| Attempt | No Applied | No Sat | No.of Subjects Passed & Percentage | | | | | | | | Qualified to Apply for University | % |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 03 | % | 02 | % | 01 | % | 0 | % | | |
| 01 | 139 | 138 | 60 | 43.48 | 24 | 17.39 | 17 | 12.32 | 37 | 26.81 | 60 | 43.48 |
| 02 | 47 | 41 | 29 | 70.73 | 07 | 17.07 | 03 | 7..32 | 02 | 4.88 | 29 | 70.73 |
| Total | 188 | 179 | 89 | 49.72 | 31 | 17.32 | 20 | 11.17 | 39 | 21.79 | 89 | 49.72 |

## STREAM WISE ANALYSIS - 2011

| Stream | Attempt | No. Applied | No. Sat | No of Subjects | | | | | | | | Qualified to Apply for University | % |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 3 | % | 2 | % | 1 | % | 0 | % | | |
| BIO - SCIENCE | 1 | 28 | 28 | 18 | 64.29 | 04 | 14.29 | 03 | 10.71 | 03 | 10.71 | 18 | 64.29 |
| | 2 | 11 | 10 | 07 | 70.00 | 01 | 10.00 | 01 | 10.00 | 01 | 10.00 | 07 | 70.00 |
| | Total | 39 | 38 | 25 | 65.79 | 05 | 13.16 | 04 | 10.53 | 04 | 10.53 | 25 | 65.79 |
| | | | | | | | | | | | | | |
| PHY - SCIENCE | 1 | 49 | 49 | 18 | 36.73 | 12 | 24.49 | 03 | 6.12 | 16 | 32.65 | 18 | 36.73 |
| | 2 | 15 | 13 | 09 | 76.92 | 03 | 23.08 | 01 | 7.69 | — | — | 09 | 60.00 |
| | Total | 64 | 62 | 27 | 43.55 | 15 | 24.19 | 04 | 6.45 | 16 | 25.81 | 27 | 42.19 |
| | | | | | | | | | | | | | |
| COMMERCE | 1 | 47 | 46 | 16 | 34.78 | 03 | 6.52 | 10 | 21.74 | 17 | 36.96 | 16 | 34.78 |
| | 2 | 15 | 13 | 10 | 76.92 | 01 | 7.69 | 01 | 7.69 | 01 | 7.69 | 10 | 76.92 |
| | | 62 | 59 | 26 | 44.07 | 04 | 14.52 | 11 | 18.64 | 18 | 30.51 | 26 | 44.07 |
| | | | | | | | | | | | | | |
| ART | 1 | 21 | 20 | 11 | 55.00 | 07 | 35.00 | 01 | 5.00 | 01 | 5.00 | 11 | 55.00 |
| | 2 | 06 | 05 | 03 | 60.00 | 02 | 40.00 | — | — | — | — | 03 | 60.00 |
| | Total | 27 | 25 | 14 | 56.00 | 9 | 36.00 | 01 | 4.00 | 01 | 4.00 | 14 | 56.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழைய மாணவர் சங்கத்தினால் வெற்றிகரமாய் முன்னெடுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட ஓர் சேவை நலன் பாராட்டு நிகழ்வு

ஸ்ரீகோணேஸ்வரா இந்துக்கல்லூரி பழையமாணவர் சங்கம் வரலாற்றில் முதற் தடவையாக ஒரு சேவை நலன் பாராட்டு விழாவினை வெகு விமர்சையாக நடாத்தி முடித்திருந்தது. எமது கல்லூரியின் முன்னாள் அதிபரும், சங்கத்தின் தலைவருமாகிய திரு.சி.தண்டாயுதபாணி அவர்களின் சேவை நலன் பாராட்டு நிகழ்வே அவ்வாறு அழகுற நடாத்தி முடிக்கப்பட்டிருந்தது. அந்த நிகழ்வின் நிழற்படங்கள் சில ....................

செ.பத்மசீலன் - உபதலைவர் - ப.மா. சங்கம்












2011ம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் தேசிய மட்டத்தில் 12வது இடத்தினையும்,
தமிழ்மொழி மூலம் 1வது இடத்தினையும் பெற்ற மாணவன் ஜனகன் அவர்களுக்கு எமது பாராட்டுக்கள்

கல்லூரி நிர்வாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி / இ. கி. ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி
# பழைய மாணவர் சங்கத்தின் தோற்றம்

தி/இ.கி.ச. ஸ்ரீகோணேஸ்வரா இந்துக்கல்லூரி பழையமாணவர் சங்கத்தின் பொன்விழா நிகழ்வு 2013ம் ஆண்டில் கொண்டாடப்படும் என தீர்மானம் ஒன்று நிர்வாக குழுக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட போதிலும் பழைய மாணவர் சங்கத்தின் தோற்றம் பற்றிய பிந்திக் கிடைத்த தகவலானது 2013ம் ஆண்டில் பொன்விழா நிகழ்வினை நடத்தமுடியாத ஒரு நிலையினை உருவாக்கியுள்ளது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். அண்மையில் கிடைத்த தகவல்களின் படி 1937ம் ஆண்டு திருக்குறல் நூல் ஒன்று கட்டுரைப் போட்டியில் 2ம் இடம் பெற்ற மாணவி ஒருவருக்கு பரிசுப் பொருளாக பழைய மாணவர் சங்கத்தினால் வழங்கப்பட்டிருந்ததை ஆதாரத்துடன் அறியக்கூடியதாய் இருந்தது. அத்துடன் 1942ம் ஆண்டு இரண்டு வகுப்பறைகள் பழையமாணவர் சங்கத்தினால் கட்டிக் கொடுக்கப்பட்டதாக 2008ல் வெளிவந்த உள்ளக்கமலம் மலர் பறைசாற்றி நிற்கின்றது. எனவே. பழைய மாணவர் சங்கத்தின் தோற்றம் பற்றிய ஓர் தீர்க்கமான முடிவினை எடுக்கவேண்டிய நிலையில் தற்போதய செயற்குழு காணப்படுகின்றது. இங்கு சர்ச்சைக்குரிய விடயம் என்னவெனில் 1937ம் ஆண்டும் 1942ம் ஆண்டும் நிறைவேற்றப்பட்டிருக்கும் அச்செயற்பாடுகளானது பழைய மாணவர் சங்கம் ஒரு செயற்குழு வடிவில் அதாவது தலைவர், செயலாளர் மற்றும் உறுப்பினர்களைக் கொண்டதாக அமையப்பெற்று அச்செயற்களை நிறைவேற்றியதா அல்லது பழைய மாணவர்கள் சிலரோ பலர் சேர்ந்து இவ்வாறான செயற்ப்பாடுகளை நிறைவேற்றியிருந்தார்களா என்ற வினாவிற்கு விடைதேடவேண்டிய நிலை ஒன்று எழுந்துள்ளது. எனவே பழையமாணவர் சங்கத்தின் தோற்றம் பற்றிய யாதாயினும் தகவல் கிடைக்கப்பெறின் அல்லது ஆண்டு ஞாபகத்தில் இருக்குமாயின் அவ்வாறான தகவல்களை தற்போதய சங்கத்தின் நிர்வாககுழுவுக்கு தெரியப்படுத்தி அதன் மூலம் ஓர்முடிவினை எடுக்க வழிகோலவேண்டும் என பழைய மாணவர்களைக் கேட்டுக்கொள்வதோடு, இம் முடிவினை மேற் கொள்ள ஒரு பொதுக் கூட்டத்தினை கூட்டவேண்டிய கட்டாய தேவை ஒன்று எழுந்துள்ளதையும் கருத்தில் கொள்ளவேண்டியுள்ளது.

செயலாளர்
தி.ஹரிகரன்

# பழைய மாணவர் தினம் ஜூன் 30 ஒன்று கூடல் [2011]

திருகோணமலை இராமகிருஸ்ண சங்க ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் வருடம் தோறும் நடாத்தும் பழயை மாணவர் தினமானது வரலாற்றில் முதல் தடவையாக (30.06.2004) மிகவும் சிறப்பாக நடைபெற்றது. நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக 2005ல் நடைபெறவில்லை அதனைத் தொடர்ந்து ஒவ்வொருவருடமும் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது. இந்த ஒன்று கூடலானது பழைய மாணவர்கள் தாம் கல்வி கற்ற கல்லூரியைத் திரும்பிப் பார்ப்பதற்கும் அதன் வளர்ச்சிகளை அறிவதற்கும் கல்லூரியின் தேவைகளை அறிந்து கொள்வதற்கும் பழைய மாணவர்களின் உன்னத நிலைகளை அறிவதற்கும் வாய்ப்பாக அமைகிறது.

பழைய மாணவர் தினத்தையொட்டி பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் மாணவர்களிற்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப்பட்டு பரிசில்களும் நினைவுச் சின்னங்களும் வழங்கி கௌரவிக்கப்படுகின்றனர். அத்துடன் எமது பழைய மாணவர்கள் தொழில்சார் உன்னத நிலைகளையும் தேசிய மட்டத்தில் விருதுகள் பெற்ற மாணவர்களையும் இனம் கண்டு அன்றைய தினத்தில் நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்படுகின்றனர்.

எமது பழைய மாணவர்களின் தொழில்சார் உன்னத நிலைகளுக்கமைவாக திரு. பா.சசி மகேந்திரன் (மேல் நீதிமன்ற நீதிபதி, கல்முனை மட்டக்களப்பு) வைத்திய கலாநிதி பு. கனேகபாகு (விசேட மருத்துவ நிபுணர். பொது வைத்தியசாலை திருக்கோணமலை) எந்திரி து. தவணேஸ்வரன் ( பிரதிப் பொது முகாமையாளர், இலங்கை மின்சார சபை கி.மா) திரு இ. சுப்பிரமணியம் ( மாவட்ட பொது முகாமையாளர், இலங்கை வங்கி, முன்னாள் உப தலைவர் பழைய மாணவர் சங்கம்) ஜனாப். அ. பஸீர் அமீர் (முன்னாள் விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர் இந்துக் கல்லூரி) ஆகியோர் கௌரவிக்கப்பட்டு நினைவுச்சின்னங்களும் வழங்கப்பட்டன.

எமது பழைய மாணவரான திரு.ந. சந்திரலிங்கம் பழைய பாடல்களைப் பாடி அனைவரையும் மகிழ்வித்தார். அத்துடன் பழைய மாணவர்கள் ஆசிரியர்கள் பங்கு பற்றலுடன் இராப்போசன விருந்தும் இடம் பெற்றது.

சுமார் 800 பழயை மாணவர்களை சங்க உறுப்பினர்களாகக் கொண்ட எமது சங்கத்தில் அரைப்பங்கிற்கும் குறைவான பழைய மாணவர்களே ஒன்று கூடலில் சங்கமிப்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். எதிர்வரும் பழைய மாணவர் தினங்களில் அனைவரும் பங்கு கொண்டு எமது கல்லூரியின் வளர்ச்சிக்கும் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளை அடைவதற்கும் பழைய மாணவர்களாகிய நாம் வழியமைக்க வேண்டும்.

எமது கல்லூரி பல சாதனைகளை ஏற்படுத்த வழியமைக்க பழைய மாணவர்களின் பங்கு மிகவும் அவசியமானது.

நல்ல தம்பி குமணன்
உப தலைவர், பழைய மாணவர் சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடா பழைய மாணவர் சங்கத்தின் பயன்மிகு மகிழ்செயல் மற்றும் மகிழ்பொழுது 9-7-2011

தி/ இ. கி. ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி கனடா பழைய மாணவர் சங்கத்தின் ஒன்று கூடல் நிகழ்வு 09-07-2011ம் திகதி கனடாவில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு எமது கல்லூரியின் முன்னாள் அதிபரும் பழைய மாணவர் சங்கத்தின் தலைவருமாகிய திரு. சி. தண்டாயுதபாணி அவர்கள் முதன்மை விருந்தினராக அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டிருந்தார்.

கல்வித்துறைக்கு நீண்டகாலமாக அர்ப்பணிப்புடன் ஆற்றிய தன்னலமற்ற சேவை மற்றும் இந்துக்கல்லூரியின் வளர்ச்சியிலும் உயர்ச்சியிலும் பலராலும் சிலாகித்துப் பேசப்பட்ட அன்னாரின் வகிப்பங்கு போன்றவற்றுக்கு மதிப்பளித்து, பாராட்டி கௌரவிக்கும் முகமாக கனடா பழைய மாணவர் சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட இப்பயன்மிகுமகிழ் செயல் மற்றும் மகிழ்பொழுது பலராலும் பாராட்டிப்பேசப்பட்ட ஓர் நிகழ்வாக அமைந்திருந்தது.

இப்பயன் மிகு மகிழ்செயல் மற்றும் மகிழ்பொழுது என்பனவற்றின் விளைவால் டாக்டர் ஞானி புலமைப்பரிசில் நிதியம் மீளவும் புதுப்பிக்கப்பட்டு புத்துயிர் அளிக்கப்பட்டது. எமது கல்லூரியில் கற்றல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு போதிய வசதிகளைக் கொண்டிராத இருபது மாணவர்கள் இந்நிதியத்தின் பயனாளிகளாக விளங்குகின்றார்கள்.

இப்பயன்மிகு மகிழ்செயல் மற்றும் மகிழ்பொழுது கனடா பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் திரு கு தயாநிதி, செயலாளர் மற்றும் நிர்வாக உறுப்பினர்களின் முயற்சியில் முகிழ்த்தெழுந்த ஓர் நிகழ்வாகும். அன்னிய தேசம் சென்றாலும் கல்லூரி மீதான கண்ணியம் கலையாது பங்களிப்பினை நல்கிவரும் புலம் பெயர் வாழ் எமது பழைய மாணவ உறவுகள் என்றென்றும் தாய்சங்கத்தின் நன்றியுணர்வோடுகூடிய பாராட்டுதல்களுக்கு உரித்துடையவர்கள் என்பது நிதர்சனம். உங்கள் பலம் எங்கள் வளம்.

ச.பாரதிநாதன்
உறுப்பினர் - ப.மா.சங்கம்

# திருக்கோணமலை வலயமட்டத்திற்கு உட்பட்ட பாடசாலைகளின் கல்வி பொது சாதாரணதர வகுப்பு மாணவர்களுக்கான விஞ்ஞான வினாத்தாள் போட்டிப்பரீட்சை 2011

எமது கல்லூரியின் முன்னாள் விஞ்ஞான ஆசிரியர் அமரர் செல்வி.கு.சாதாசிவம் அவர்களின் ஞாபகார்த்தமாக "விஞ்ஞானப் பாடத்திறன் மேம்படுதல்" எனும் நோக்கில் விஞ்ஞானப் பாடத்தின் வினாத்தாள் பரீட்சை ஒன்று நடத்தப்பட்டிருந்தது. இதன் அடிப்படையில் கூடிய புள்ளிகளைப் பெற்ற பாடசாலை மாணவர்கள் பரிசில்கள் வழங்கி ஊக்குவிக்கப்பட்டிருந்தார்கள். ஸ்ரீகோணேஸ்வரா இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் விரிந்து செல்லும் பல செயற்பாடுகளுள் இச் செயற்பாடும் கடந்தவருடம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. இந்துக்கல்லூரியின் கல்வித்திறன் மேம்பாட்டுடன் மட்டும் தன்னை எல்லைப்படுத்திக் கொள்ளாமல் விரிந்து சென்று ஏனைய பாடசாலைகளின் மாணவர்களின் கல்வித்திறனிலும் அக்கரையுடன் ஈடுபடுவது பலருக்கும் பயன்வாய்ந்த ஓர் செயல்பாடாக அமையப்பெற்றுள்ளது.

சா.ஸ்ரீதரன் - செயலாளர் - ப.மா.சங்கம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி/இ.கி.ச ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினால் வழங்கப்படும் புலமைப்பரிசில் நிதியம் பற்றிய ஓர் பார்வை

தி/இ.கி.ச ஸ்ரீகோணேஸ்வரா இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வழிகாட்டல், மற்றும் மாணவர்களின் இடைநிலை அறிதல் போன்ற படிமுறைகளின் கீழ் புலமைப் பரிசில் பெறும் மாணவர்கள் பின்வரும் மூலங்களில் இருந்து தமது கற்றல் நடவடிக்கைகளுக்காக நிதியினை பெற்று வருகின்றார்கள். போதிய பொருளாதார வசதிகளைக் கொண்டிராத மாணவர்கள் கல்லூரி நிர்வாகத்தின் மூலம் இனம் காணப்பட்டு இந்நிதியத்தின் மூலம் நிதியினைப் பெற்றுவருகின்றார்கள்.

1. டாக்டர் ஞானி கல்விநிதியம் : இதன் மூலம் 20 மாணவர்கள் நிதியினைப் பெற்று தமது கற்றல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். கனடா பழைய மாணவர் சங்கம் இந்நிதியினை வழங்கிவருகின்றது. இந்நிதியத்தின் பயனாளிகளாக தரம் 8, க.பொ.த சாதாரணதரம், மற்றும் உயர்தர வகுப்பு மாணவர்கள் காணப்படுகின்றார்கள். மாதம் ஒன்றுக்கு 36000/= நிதித் தொகை வழங்கப்படுகின்றது.

2. செல்வி கு. சதாசிவம் கல்வி நிதியம் : மறைந்த எமது கல்லூரியின் முன்னாள் விஞ்ஞான ஆசிரியர் கு.சதாசிவம் அவர்களின் ஞாபகார்த்தமாக இந்நிதிவழக்கப்படுகின்றது. மொத்தம் 05 மாணவர்கள் இந்நிதியத்தின் பயனாளிகளாக காணப்படுகின்றார்கள். இதில் சாதாரணதரம், உயர்தரம் வகுப்புமாணவர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளார்கள். கல்லூரியின் பழைய மாணவன் P.மனோகரன் என்பவாரல் இந்நிதி மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது.

3. ஆர்.ஜெயமோகன் கல்விநிதியம் : எமது கல்லூரியின் மூத்த பழைய மாணவர் திரு.ஆர்.ஜெயமோகன் என்பவரால் வழங்கப்படும் நிதியினை உயர்தரவகுப்பில் கல்விகற்கும் மாணவன் ஒருவர் பெற்று தனது கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்.

4. திரு. ஹேமகுமார் கல்வி நிதியம் : இந்நிதியத்தின் மூலம் உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் மாணவன் ஒருவர் நிதியினைப் பெற்று தனது கற்றல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்.

5. திரு ஜஸ்மின் நாயக்கபாபு கல்வி நிதியம் : எமது கல்லூரியின் பழையமாணவன் ஜஸ்மின் நாயக்க பாபு என்பவரால் இந்நிதி கல்லூரியின் கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஒரு மாணவனுக்கு அளிக்கப்படுகின்றது.

ப.மா.ச - பொருளாளர் - எஸ்.சர்வேஸ்வரன்

# உலக ஆசிரியர் தினம் - 2011

ஐப்பசி மாதம் 5ம் திகதி உலகெங்கும் ஆசிரியர் தினம் வெகுசிறப்பாக கொண்டாடப்பட்டு வருகின்றது. இத்தினம் ஆசிரியர்களை கௌரவிக்கும் தினமாக மட்டுமல்ல அவர்களது சேவையினையும் பெருமையினையும் அவர்களது அர்ப்பணிப்புக்களையும் உலகெங்கும் எடுத்துரைக்கும் தினமாகவும் அமைந்துள்ளது.

"ஆசிரியர் பணியே அறப்பணி"
அதற்கு உன்னை அர்ப்பணி"

என்ற பொன்னான வாக்கிற்கு இலக்கணமாக அமைந்தவர்கள் ஆசிரியர்கள் இத் தினத்தில் எமது தி/ ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியில் ஆசிரியர்களை கௌரவித்தும் அவர்களது சேவையினை மதித்தும் உலக ஆசிரியர்தினத்தினை ஒரு பெருவிழாவாக தொடர்ந்து நடத்தி வருகின்றோம் இப் பெரும்பணியினை எமது பாடசாலையில் பழைய மாணவர்சங்கம் முன்நின்று நடத்தி வருகின்றது என்பதை இவ்விடத்தில் சுட்டிக் காட்டுவதில் பெருமகிழ்வு அடைகின்றோம்.

எமது தேசிய கல்விப் புலம் 40 இலட்சம் மாணவர்களையும் 02 இலட்சம் ஆசிரியர்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இவ்விரு தொகையினரும் 10ஆயிரம் பாடசாலைகளை களமாக கொண்டுள்ளனர். இந்து / பௌத்த / கிறிஸ்தவ / இஸ்லாமிய சமுகங்களைச்சேர்ந்தவர்கள் கற்றலிலும் கற்பித்தலிலும் உள்ளடங்குகின்றனர். தற்பொழுது உலகெங்கும் நவீன கல்விக் கொள்கைகளும் நவீன கற்பித்தல் உத்திகளும் அதிநவீன கற்றல் முறைகளும் செல்வாக்குப் பெற்றிருக்கின்ற இவ் வேளையில் பாரம்பரிய கல்விக் கொள்கைகளும் எம்மத்தியில் இடம் பெறத்தான் செய்கின்றன. அதி நவீன கற்பித்தல் முறைகளாக இலத்திரனியல் வகுப்றைகளும் (E-Class Rooms, இலத்திரனியல் ஆசிரியர்களும் (E - Teachers) மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளில் இடம் பிடித்து வருகின்றன. ஆனாலும் ஆசிரியர் பெருந்தகையோரின் அன்பும், ஆலோசனைகளும், வழிகாட்டல்களும், விழுமியங்களும் அவற்றில் உள்ளடங்குகின்றனவா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. ஆகவே மாதா, பிதா, குரு, தெய்வம், என்ற மகத்தான வாசகம் எம்மத்தியில் எமது பாரம்பரியத்தில் எமது மரபில் எமது பண்பாட்டில் அடி அத்திபாரமாக உள்ளது என்பதை மறுக்க முடியாது.

நிறைவாக மாதா, பிதாவினை நாம் அன்றும், இன்றும், என்றும் வணங்குவது போல எமது ஆசிரியர் பெருந்தகையோரையும் வணங்கவேண்டும் அவர்களது சேவையினை நாம் மனதார போற்ற வேண்டும். அவர்களை நாம் வாழ்த்த வேண்டும் இப் பெரும்பணியினை வருடம் தோறும் முன்னெடுத்து வருகின்ற எமது பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் இப்பணியினை ஒரு தெய்வீக பணியாக முன்னெடுத்து வருகின்றமை அனைவராலும் குறிப்பிடத்தக்க தொன்றாகும் இவ்வாண்டும் ஆசிரியர்களின் ஆவணங்களையும் சான்றிதழ்களையும் பாதுகாத்துக் கொள்ளத்தக்கதான பெறுமதி மிக்க கோவை ஒன்றினை அன்பளிப்பாக வழங்கியிருந்தோம் என்பதனை கூறிக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

ச. சிறிதரகுமார் - உதவி இதழ் ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TRINCOMALEE R.K.M/ SRI KONESWARA HINDU COLLEGE
# OLD STUDENTS ASSOCIATION - CANADA
## EXECUTIVE COMMITTEE - 2012

| | | | |
|---|---|---|---|
| PRESIDENT | K. K. THAYANITHIE | 416 493 6126 | kkthavanithie @ yahoo.com |
| VICE PRESIDENT | P.RAJANIKANTHAN | 416 697 6211 | goodtobegreen . ca@gmail.com |
| SECRETARY | G. KRISHNAKUMAR | 416 743 9133 | trincokanna@ yahoo.ca |
| ASSISTANT SECRETARY | R. RAVI VARMAN | 416 754 6645 | rrvam an @ rogers.com |
| TREASURER | K. SRIBASKARAN | 905 369 9953 | sri3031@hotmail.com |
| EXECUTIVE COMMITTEE | KUMAR KRISHNAN | 416 277 2962 | kumar.krishnan@gmail.com |
| | N. PASKARANATHAN | 647 299 3611 | npaskasasi@hotmail.com |
| | A. PIRABAKARAN | 416 833 9545 | pirabasasi@hotmail.com |
| | P. RAKURAKARAN | 416 824 5575 | rakunathii@yahoo.ca |
| | S. RAMANEEKARAN | 647 865 7972 | lionrm anee@gmail.com |
| | DR.G.SOMASEKARAM | 647 378 0622 | som asekaran 1970@yahoo.com |
| | S. SRITHARAN | 416 269 4300 | sri27kabi@yahoo.co |
| | S. THAYALASEELAN | 416 616 3264 | thayalan26@hotmail.com |
| | N. THULASEETHARAN | 416 836 3000 | thulasee@yahoo.ca |
| | S. UMASHANKARAN | 647 889 6975 | uma2477@yahoo.com |

*Best wishes on your OBA day*

**Hatton National Bank**

**Hatton National Bank**
**Trincomalee Branch**

*"Your Partner in Progress"*

***No. 59, Ahambaram Road, Trincomalee***
***Tel : 026 2222572, 026 2221092, 026 2222801***
***Fax : 026 2222610***
***E-mail : trinco@hnb.lk***

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org